## இலவசப் பேருந்துப் பயணத்தினால்

# மேன்மையடைந்து வரும் தமிழ்நாட்டு மகளிர்!

### மு.க.ஸ்டாலினின் ‘திராவிட மாடல்’ ஆட்சிக்கு ‘தி டைம்ஸ் ஆப் இந்தியா’ ஆங்கில ஏடு புகழாரம்!

**சென்னை, பிப். 27-**

**தமிழ்நாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான ‘திராவிட மாடல்’ ஆட்சியில் செயல்படுத்தப்பட்டு வரும் மகளிர் இலவசப் பேருந்து பயணத் திட்டத்தால், தமிழ்நாட்டு மகளிர் மேன்மை அடைந்து வருகின்றனர் என்று ‘தி டைம்ஸ் ஆப் இந்தியா’ ஆங்கில நாளேடு செய்திக் கட்டுரை வெளியிட்டுள்ளது.**

நகரப் பேருந்துகளில் மகளிருக்கான விடியல் பயணத் திட்டத்தினால் பெண்களுக்கான சேமிப்பு உயர்ந்துள்ளதுடன், அரசு அளிக்கும் மானியத்தால், போக்குவரத்துக் கழகங்களின் வருவாயும் அதிகரித்துள்ளதாகவும் ‘தி டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளிதழ் பாராட்டு தெரிவித்துள்ளது.

நகரப் பேருந்துகளில் பெண்களுக்கான கட்டணமில்லா பயணத் திட்டத்தின் நன்மைகள் குறித்து ‘தி டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளிதழ் சிறப்புக் கட்டுரை ஒன்றை வெளியிட்டுள்ளது. சென்னை, கோவை, சேலம், நெல்லை உள்ளிட்ட நகரங்களில், கட்டணமில்லா பேருந்துகளில் பயணம் செய்யும் பெண்களிடம் சி.ஏ.ஜி. (Citizen consumer and civic Action Group) அமைப்பு நடத்திய ஆய்வு அறிக்கை வெளியாகி உள்ளது.

அதன்படி, இத்திட்டத்தினால், மாதம் ஆயிரம் ரூபாய் வரை தங்களால் சேமிக்க முடிவதாக பெண்கள் தெரிவித்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த சேமிப்பு, பிள்ளைகளின் கல்வி மற்றும் உணவுத் தேவைக்கு உதவியாக உள்ளதாகவும், ஏழை மற்றும் நடுத்தரக் குடும்பங்கள் இத்திட்டத்தினால் பயனடைந்துள்ளதாகவும் அக்கட்டுரையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.



மேலும், கட்டணமில்லா பயணத் திட்டத்திற்காக அதிகபட்ச தூரத்தை கணக்கிட்டு, ஒரு பயணச் சீட்டுக்கு 16 ரூபாய் மானியமாக மாநில அரசு வழங்குவதால், போக்குவரத்துக் கழகங்களுக்கு வழக்கமானதைவிட கூடுதல் வருவாய் கிடைப்பதாகவும், போக்குவரத்துக் கழகங்களுக்கு 16 ஆயிரத்து 788 கோடி ரூபாய் அரசின் மானியம் கிடைத்துள்ளதாகவும் இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் முக்கியமான 6 நகரங்களில் தொடர்ந்து பேருந்துகளில் பயணம் மேற்கொள்ளும் 3 ஆயிரம் பெண்களிடம் அவர்களின் இலவசப் பயணம் தொடர்பாக சர்வே எடுக்கப்பட்டது.

அந்த சர்வே முடிவின்படி அவர்கள் மட்டும் பயனடையாமல் பேருந்து கழகங்களும் பலனடைந்து வருவது தெரிய வந்துள்ளது. வரிப் பணம் மீண்டும் பகிர்ந்தளிக்கப்படுவது, நேரடியாகவும் மறைமுகமாகவும் பல்வேறு பயன்கள் கிடைக்கப் பெறுவதும் தெரியவந்துள்ளது.

தி.மு.க. அரசின் இந்த கட்டணமில்லா பேருந்து பயணத் திட்டம் அரசியல் காரணங்களுக்காக வேண்டுமானால் சிறிதளவிலான விமர்சனங்கள் எழுகிறதே தவிர, உண்மையில் அத்திட்டம் ஏழைகளுக்கான நலத் திட்டமாகத்தான் உள்ளது.

சென்னையில் 50 சதவிகித பேருந்துகள் (சுமார் 1500 பேருந்துகள்) மட்டுமே மகளிர் கட்டணமில்லா பேருந்துகளாகச் செயல்படுவதால் பயணிக்கும் மகளிர் கூட்டம் நிரம்பி வழிவதால் அது குறித்து எதிர்மறை விமர்சனங்கள் இருந்தாலும் அத்தனை மகளிரும் பயனடைவதை பார்க்க வேண்டும்.



While Women Benefit From Free Fares, The Scheme Also Boosts Revenue And Ridership For Transport Corporations And Reduces Congestion And Pollution

**WHEELS OF THE BUS GO WIN, WIN, WIN**

G Ananthakrishnan

OTHER SPIN-OFFS FROM WOMEN'S FREE TRAVEL INCLUDE WOMEN BEING ABLE TO TRAVEL LONGER DISTANCES WITHOUT EXTRA EXPENDITURE, TO ACCESS EMPLOYMENT,

ஒவ்வொரு இலவச டிக்கெட்டுக்கும் அரசு ரூபாய் 16 நஷ்ட ஈடு வழங்குவதால், பேருந்து கழக நிர்வாகத்திற்கும் கணிசமான தொகை கிடைக்கிறது. மகளிர்க்கு இலவசப் பயணம்; ஆனால் அதற்கான டிக்கெட்டாய் நிர்வாகத்திற்கு நஷ்டஈடு கிடைத்து விடுவதால் இது இன்னொரு பக்கம் பயன் என்றும் கருதலாம்.

பொது விநியோக முறை மூலம் உணவுப் பொருட்கள் விநியோகம் செய்யப்படுவதைப் போன்றே மக்களின் வரிப்பணம், கட்டணமில்லா பேருந்து பயணத்திற்காக செலவிடப்படுவதை எப்படி குறைகூற முடியும் என்றும் கேள்வி எழுப்பி உள்ள ‘தி டைம்ஸ் ஆப் இந்தியா’ கட்டுரை, இத்திட்டத்தை குறைகூறுவது அரசியல் உள்நோக்கம் கொண்டது என்றும் தெரிவித்துள்ளது.

